

கலைஞர் தொலைக்காட்சி செய்திப் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர் திருமாவேலன் இல்ல மணவிழா வரவேற்பு நிகழ்வில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் உறவினர்கள் உள்ளனர்.



திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மத்திய, கிழக்கு, வடக்கு, தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே என் நேரு அவர்கள் உரையாற்றினார், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சாமிநாதன், வேலுச்சாமி, வைரமணி, தியாகராஜன், கதிரவன், மேயர் அன்பழகன், அன்பில் பெரியசாமி, சௌந்தர பாண்டியன், கே.என்.சேகரன், ஸ்டாலின் குமார், பழனியாண்டி அவைத்தலைவர்கள் அம்பிகாவதி, தர்மலிங்கம், கோவிந்தராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் முத்துச்செல்வம், வண்ணை அரங்கநாதன் மதிவாணன் ,குடமுருட்டி சேகர், ஆனந்த் ,தர்மன் ராஜேந்திரன், சித்ரா பாரிவள்ளல் கருணை ராஜா , சபியுல்லா, காஜாமலை விஜய், கண்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### ‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் – எழுத்தாளர்


# ப.திருமாவேலன் புதல்வி டாக்டர் ரே.தி.அமிர்தா - டாக்டர் பா.ரபிந்திரன் மணவிழா!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை! உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

**சென்னை, செப்.7-**

**‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் புதல்வி மணவிழா இன்று (செப்.7) சென்னை திருவான்மியூர் ராமச் சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது. மணவிழா வரவேற்பு நேற்று (செப்.6) மாலை நடைபெற்றது.**

**இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-**



புலவர் மு.படிக்கராமு - ப.முத்து லக்குமி, சு.கிருஷ்ணன் - கி.அழகம்மாள் ஆகியோரின் பேத்தியும், ‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் - ரேணுகா திருமா வேலன் இணையரின் புதல்வியு மான டாக்டர் ரே.தி.அமிர்தாவுக்கும் - கா.சுந்தரம் - சு. லட்சுமி, இரா.பாண்டியராஜன் - பா.இராணி அம்மாள் ஆகியோரின் பேரனும், டாக்டர் சு.பாலசுப்பிரமணியன் - சுதா பாலசுப்பிரமணியன் இணையரின் புதல்வருமான டாக்டர் பா.ரபிந்திரனுக்கும் மணவிழா இன்று 7.9.2026 - திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை திருவான்மியூர் ராமச்சந்திராகன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மண விழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கின்றார்.

புலவர் மு.படிக்கராமு திருக்குறள் நெறி நிகழ்த்துகிறார்.

**மணவிழா வரவேற்பு!**

முன்னதாக - மணவிழா வரவேற்பு நேற்று (6.9.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை நடைபெற்றது. இம்மண விழா வரவேற்பில் கழக முன்னணி யினர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடகத் துறையினர், பல்வேறு துறைகளின் முன்னணிப் பெருமக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

